# ஆண்டவரே! என் ஆயர்

பாடம் 23

எனது பெயர் தாவீது. உங்கள் அனைவரையும் போன்று நானும் ஒரு சிறுபிள்ளை. எனது தந்தையின் பெயர் ஈசாய். எனக்கு ஆறு சகோதரர்கள் உள்ளனர். எனது குடும்பத்தில் நான் தான் இளையவன். எனது தொழில் ஆடுமேய்த்தல் ஆகும். நான் யாழ் மீட்டுவதில் வல்லவன். வீரமுள்ளவன். போர்த்திறன் பெற்றவன். பேச்சுத் திறன் உடையவன். ஆண்டவர் எப்போதும் என்னுடன் இருக்கின்றார். நான் சிவந்த மேனியும் ஒளிரும் கண்களும் கொண்டவன்.

எனது ஆடுகள் தமக்கு தேவையான உணவும், நீரும் பெற்றுக் கொள்வதற்காக அவைகளை அழைத்துச் செல்வேன். ஆடுகள் புல் மேயும் போது நான் அவைகளுக்கு அருகில் அமர்ந்து யாழ் மீட்டி பாடல்களைப் பாடுவேன். உங்களுக்கு தெரியுமா? நான் பாடிய பாடல்கள் பல வேதாகமத்தில் திருப்பாடல்கள் எனும் நூலில் காணப்படுகின்றன. அந்நூலில் 150 பாடல்கள் காணப்படுகின்றன. ஆடுகளின் ஆயனாக நான் இருப்பது போல் நல்ஆயர் ஒருவர் எனக்கும் இருக்கின்றார். அவர் என்னை நேசிக்கும் ஆண்டவரே ஆவார்.

என் நல் ஆயருக்காக நான் பாடிய விசேட பாடலை அனைவரும் சேர்ந்து பாடுவோம்.

**திருப்பாடல்கள் 23 : 1 - 6**

ஆண்டவரே என் ஆயர்
        எனக்கேதும் குறையில்லை
பசும்புல் வெளிமீது எனை
        அவர் இளைப்பாறச் செய்வார்:
அமைதியான நீர் நிலைகளுக்கு
        எனை அழைத்துச் செல்வார்
அவர் எனக்குப் புத்துயிர் அளிப்பார்:
        தம் பெயர்க்கேற்ப எனை
நீதி வழி நடத்திடுவார்:



மேலும், சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கில்
நான் நடக்க நேர்ந்தாலும்:
நீர் என்னோடு இருப்பதால்
எத் தீங்கிற்கும் அஞ்சிடேன்:
உம் கோலும் நெடுங் கழியும்
என்னைத் தேற்றும்.
என்னுடைய எதிரிகளின் கண்
முன்னே எனக்கொரு விருந்தினை
ஏற்பாடு செய்கின்றீர்: ஏன் தலையில் நறுமணத் தைலம்
பூசுகின்றீர்: எனது
பாத்திரம் நிரம்பி வழிகின்றது.
உண்மையாகவே,
என் வாழ்நாள் எல்லாம்
உம் அருள் நலமும் பேரன்பும்
என்னைப் புடைசூழ்ந்து வரும்,
நானும் ஆண்டவரின் இல்லத்தில்
நெடு நாள் வாழ்ந்திருப்பேன்.

## செயற்பாடு

1. எமது நாளாந்த வாழ்வில் மேற்கூறிய பாடல் பயன்படக்கூடிய சந்தர்ப்பங்கள் சில குறிப்பிடுக.
2. ஆண்டவர் இயேசுவை நல்லாயனாக ஏற்றுக் கொண்டு ஒப்புவிக்கும் ஜெபம் ஒன்று எழுதவும்.